இனிப்பு, சொக்லட், பிஸ்கட் மற்றும் பழவற்றகள் விற்பனையாளர்

கணேஷா வர்த்தக நிலையம், 65, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கேக் தயாரிப்பு பொருள்கள் மற்றும் குளிர்பானத் தயாரிப்புகளைப் பெற்றிட

கணேஷா வர்த்தக நிலையம், 65, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 23 திங்கட்கிழமை (07 – 03 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 100

# கனேடிய மத்தியஸ்த முயற்சி; ஜனாதிபதி டி.பி. நிராகரிப்பு!

## வெளிநாட்டுத் தலையீட்டை அனுமதிக்க முடியாது என்கிறார்

கொழும்பு, மார்ச் 7

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்குடன் மத்தியஸ்தம் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட கனடா நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் குழு முன்மொழிந்த யோசனையை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க நிராகரித்து விட்டார்.

இனப் பிரச்சினை தீர்வு விடயத்தில் வெளிநாட்டுத் தலையீட்டை தாம் அனுமதிக்கப் போவதில்லை என்று விஜேதுங்க கூறியிருக்கிறார் என்று வெரித்தாஸ் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு — கிழக்குப் பிரச்சினை இந்த நாட்டின் உள் விவகாரமாகும். நாட்டில் உள்ள சகல அரசியல் கட்சிகளும் பங்குபற்றும் பேச்சுவார்த்தை மூலமே இப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும். வடக்கு — கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வுகாண கனடாவுக்கு விஜயம் செய்வதன் மூலம் எந்தவித பலனும் ஏற்படப்போவதில்லை —

— இவ்வாறு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க அமைச்சர் தொண்டமானிடம் கூறி விட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு — கிழக்குப் பிரச்சினைக்கு சில கனேடிய விதானங்களும், தனி நபர்களும் மத்தியஸ்தம் செய்ய விரும்புகிறார்கள் என்று இ.தொ.கா. தலைவரும் அமைச்சருமான திரு. தொண்டமான் ஜனாதிபதிக்கு அண்மையில் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருந்தார். அந்தக் கடிதத்திற்கு அளித்துள்ள பதிலிலேயே

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நங்கூரம் கிடைக்கவில்லை ஹெந்தல திரும்பிவிட்டது

யாழ்ப்பாணம், மார்ச் 7

'ஹெந்தல' கப்பல் பொருள்களை இறக்கி முடித்துவிட்டு நேற்று கொழும்பு திரும்பியது.

கடந்த 21 ஆம் திகதி பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த சமயம் இக்கப்பலின் நங்கூரம் அறுந்துவிழ்ந்தது என்பதும் — அந்த நங்கூரத்தை சுழியோடிகள் தொடர்ந்து பல நாட்கள் தேடி வந்தனர் என்பதும் தெரிந்தவையே.

நேற்றுவரை தேடுதல் நடந்த போதும் நங்கூரம் கிடைக்கவில்லை.

இந்தநிலையில் ஒரு நங்கூரத்துடன் அக்கப்பல் கொழும்பு நோக்கி புறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மண்ணெண்ணெய் ஏற்றி வந்த 'மாஹோர' கப்பலும் இன்று கொழும்பு திரும்பும். (ஒ-3)

முச்சந்தி முரளி



பொறுப்பு இல்லாமல் சும்மா உளறி, உதை நாடுகளிடம் பாடம் படிக்கப் போறார். கூவர் உத்தமர்......!

## நாளை விடுமுறை

யாழ்ப்பாணம், மார்ச். 7

உதை மகளிர் தினத்தையொட்டி நாளை செவ்வாய்க்கிழமை பொதுவிடுமுறை தினமாகும்.

நாளை வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டிருக்கும். (ஒ-3)

பிந்துனுவெவ முகாமில் இருந்து

## சிங்கள, தமிழ் இளைஞர்கள் 100 பேர் நேற்று விடுதலை

பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் இருந்து நூறு இளைஞர்கள் நேற்றுக் காலை விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்களில் 71 சிங்கள இளைஞர்களும், 29 தமிழ் இளைஞர்களும் அடங்குவர்.

இந்த இளைஞர்கள் விடுதலை செய்யப்பட்ட வைபவம் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் ஆனந்த வீரசேகர தலைமையில் நடைபெற்றது.

நாட்டில் அமைதியை நிலைநாட்டும் திட்டத்தை அமுல்படுத்துவதில் இளைஞர்கள் மீது பாரிய பொறுப்பு தங்கியுள்ளது என்று இவ்வைபவத்தில் பேசிய பிரிகேடியர் வீரசேகர குறிப்பிட்டார். (ஒ-5-6)

திருமலையில் 'வேலு சுமண' ராணுவ நடவடிக்கை:

## மிதிவெடியில் படையினர் பலர் சிக்கி கால்களை இழந்தனர்

யாழ்ப்பாணம், மார்ச். 7

திருகோணமலை மாவட்டத்தில் அண்மையில் நடந்த "வேலு சுமண" இராணுவ நடவடிக்கையின்போது விடுதலைப்புலிகளின் மிதிவெடிகளில் சிக்கி படையினர் பலர் தமது கால்களை இழந்தனர்.

இந்த இராணுவ நடவடிக்கையின்போது விடுதலைப் புலிகளுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை.

விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட விசேட தளபதி குணம் "புலிகளின் குரல்" வானொலிக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் வேலு சுமண இராணுவ நடவடிக்கை வெற்றிகரமாக நடத்தப்பட்டது என்று அரசு பிரசாரம் செய்தது. அதில் உண்மை ஏதுமில்லை.

இந்த நடவடிக்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை.

ஆனால் அப்பாவி தமிழ் மக்கள் சிலரை இராணுவத்தினர் இந்த நடவடிக்கையின் போது கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

இறக்கக்கண்டி கடற்கரைப் பகுதிக்கு சமீபமாகவும், ஒச்சவெளி சலப்பையாறு பகுதியி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ராணுவ குடியேற்ற திட்டமாகவே வெலிஓயா ஆரம்பிக்கப்பட்டது

### மகாவலி முன்னாள் உத்தியோகத்தர் தகவல்

கொழும்பு, மார்ச் 7

மகாவலி — 'எல்' திட்டம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட வெலிஓயா திட்டம் (மணலாறு) ஓர் இராணுவக் குடியேற்றத்திட்டமாகவே ஆரம்பிக்கப்பட்டது. வெலிஓயாவுக்கு மகாவலித் தண்ணீர் வரும் என்பது வெறும் ஏமாற்று வேலை, இலங்கையின் பூகோள வரைபடத்தைப் பார்த்தாலேயே இது நன்கு புலனாகும்.

பி. பி. ஸி. தென் கிழக்கு ஆசிய சேவையில் வெலிஓயா பற்றிய விமர்சன அறிக்கையில் மாவலித் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது அதிக ஆராய்ச்சி, அபிவிருத்தி உத்தியோகத்தராக இருந்த லலித் குணவர்த்தனா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரச்சினையை உண்டாக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு மேயராக செழியன்

கொழும்பு, மார்ச் 7

மட்டக்களப்பு மாநகர சபையின் மேயராக — தேர்தலில் ஆகக்கூடிய வாக்குகளைப் பெற்ற — சுயேச்சைக் குழு 2இன் தலைவர் செழியன் ஜே பேரின்பநாயகம் விரைவில் பதவி ஏற்கவுள்ளார்.

அரச சார்புப் பத்திரிகை ஒன்று இத்தகவலை வெளியிட்டது.

19 அங்கத்தவர்களைக் கொண்ட மட்டக்களப்பு மாநகரசபைத் தேர்தலில் சுயேச்சைக்குழு – 2 ஒன்பது ஆசனங்களைக் கைப்பற்றியது தெரிந்ததே. [இ-5]

## படகுகள் மீட்பு

தென்மராட்சி, மார்ச். 7

கடந்த வாரம் கிளாலிக் கடலில் இடம்பெற்ற விமானத் தாக்குதலின்போது உணவுப் பொருள்களுடன் மூழ்கிய நான்கு படகுகள் மீட்கப்பட்டு கரைசேர்க்கப்பட்டுள்ளன.

## கொழும்பில் கப்பல் விபத்து

கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நின்ற சரக்குக் கப்பல் ஒன்று நங்கூரம் அறுந்து விபத்துக்குள்ளானது. துறைமுகத்தில் நின்ற "கிரேன்" இயந்திரத்துடன் அக்கப்பல் மோதுண்டதால் "கிரேன்" பலத்த சேதம் அடைந்தது.

துறைமுகத் தொழிலாளரின் பொழுது போக்கு மண்டபமும் பலத்த சேதமடைந்தது.

புதிய பண்டாரநாயக்கா இறங்குதுறையில் கட்டப்பட்டிருந்த கப்பல் காற்றுக் காரணமாக நங்கூரம் அறுந்ததால் "கிரேனுடன்" அடியுண்டது என்றும் —

அதனால் சுமார் 4 கோடி ரூபா பெறுமதியான "கிரேனு"ம் 20 லட்சம் ரூபா பெறுமதியான கட்டடமும் சேதமடைந்ததாகவும்— தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவிலிருந்து "கிளிங்கர்" ஏற்றி வந்த கப்பலே விபத்துக்குள்ளானது. (அ)

# வடபகுதி ராணுவ நடவடிக்கைக்கு கிழக்கு - வவுனியாவிலிருந்து படை

கொழும்பு, மார்ச் 7

கிழக்கிலும், வவுனியாவிலும் உள்ள இராணுவத்தினர் வடக்கில் ஆரம்பிக்கவிருக்கும் இராணுவ நடவடிக்கைக்கு அனுப்பப்படவிருக்கின்றனர்.

சிரேஷ்ட இராணுவ அதிகாரியை மேற்கோள் காட்டி நேற்றைய 'லங்காதீப' பத்திரிகை மேற்கண்ட செய்தி வெளியிட்டுள்ளது.

இராணுவத்தில் புதிதாக இணைந்துள்ள பத்தாம் அணியைச் சேர்ந்த இராணுவத்தினரே இவ்வாறு வடக்கு யுத்தமுனைக்கு அனுப்பப்படவிருப்பதாகவும் —

கிழக்கு, வவுனியா பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பொலிஸார் இனிப் பொறுப்பாக இருப்பர் என்றும் — அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-3-6]

## அஷ்ரப் உடனடியாக பதவி விலகமாட்டார்

கொழும்பு, மார்ச் 7

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் தனது எம்.பி. பதவியில் இருந்து உடனடியாக ராஜினாமா செய்ய மாட்டார் என்று தெரிகிறது.

கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களின் போது போட்டியிட்ட ஆறு உள்ளூராட்சி மன்றங்களில் இரண்டில் தோல்வி அடைந்ததன் விளைவாக தமது எம்.பி. பதவியை இராஜினாமா செய்யப்போவதாக அஷ்ரப் அறிவித்திருந்தார்.

அதற்காக இம்மாதம் 22 ஆம் திகதி சபாநாயகர் எம்.எச். முஹம்மதுவைச் சந்திப்பதற்கு அவர் அனுமதி கோரியிருந்தார்.

சபாநாயகர் வெளிநாடு செல்வதால் அவர் மீண்டும் நாடு திரும்பிய பின்னரே இந்தச் சந்திப்பு சாத்தியப்படுமாகையால் அஷ்ரப்பின் இராஜினாமா உடனடியாக இடம்பெறாது என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-6]

## ஐ. தே. க. தெற்கில் நல்ல பாடம் படிக்கும்

### அஷ்ரப் கூறுகிறார்

கொழும்பு, மார்ச். 7

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி கிழக்கு மாகாண உள்ளூராட்சித் தேர்தலின் போது நடந்து கொண்ட விதத்துக்கு தென் மாகாணத் தேர்தலில் நல்ல பாடம் படிக்கப் போகிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் எம். பி பதவியில் இருந்து அஷ்ரப் இராஜினாமாச் செய்தால் அவரது இடத்துக்கு சம்மாந்துறை பிரதேச சபைத் தலைவர் யூ எல் எம். மொஹிதீன் நியமிக்கப்படலாம் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ராவுக்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அதேசமயம், கிழக்கு உள்ளூராட்சித் தேர்தலில் நடைபெற்றதாகக் கூறப்படும் ஊழல்கள், வன்செயல்கள் முதலான பல்வேறு ஒழுங்கீனங்கள் பற்றி பூரண அறிக்கை ஒன்றை முஸ்லிம்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படையினரின் சூட்டுக்கு பண்ணை கடலில் ஒருவர் பலி

### ஷெல் தாக்குதலில் இருவர் காயம்

ஸ்ரீலங்கா கடற்படையினர் நேற்றுப் பகல் 11.30 மணியளவில் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் யாழ். பண்ணைக் கடல் பகுதியில் ஒருவர் உயிரிழந்தார். கொட்டடியைச் சேர்ந்த தர்மலிங்கம் ராஜேஷ்கண்ணா என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

தொடர்ந்து மண்டைதீவுப் பகுதியில் இருந்து யாழ். கரையோரப் பகுதிகளை நோக்கி நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் இருவர் படுகாயமடைந்தனர்.

என். சங்கர் (17 வயது) கொட்டடி, சொலமன் சோமசுந்தரம் (80 வயது) திருநெல்வேலி ஆகியோரே காயமடைந்தனர். இவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

கொட்டடிப் பக்கமாக ஷெல் குண்டுகள் பலத்த சத்தத்துடன் விழுந்து வெடித்ததால், நகர மக்கள் பதற்றம் அடைந்தனர். (ஓ-3-5)

## வளைகுடா யுத்தத்தால் பாதிப்புற்றோருக்கு நஷ்டஈடு

### வருட இறுதியில் கிடைக்கலாம்

கொழும்பு, மார்ச். 7

வளைகுடா யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, இவ்வருட இறுதியில் நஷ்டஈடு வழங்குவதற்கான நடவடிக்கைகளில் ஐக்கிய நாடுகள் சபையின் நஷ்ட ஈட்டு ஆணைக்குழு ஈடுபட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களின் விண்ணப்பங்கள், ஐ.நா. நஷ்டஈட்டு ஆணைக்குழுவின் நிர்வாகச் சபையினால் இப்போது சரிபார்த்து பரிசீலனை செய்து வருவதாக தொழில் தொழிற் பயிற்சி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

விண்ணப்பங்களைப் பரிசீலிக்கும் வேலை இன்னும் [illegible] மாதங்களில் [illegible]

(3 ஆம் பக்கம் பார்க்க)

கிழக்கிலும் வவுனியாவிலும்

## தெரிவான உறுப்பினருக்கு கொலைப் பயமுறுத்தல்

கொழும்பு, மார்ச் 7

கடந்த வாரம் கிழக்கிலும், வவுனியாவிலும் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களில் வெற்றி பெற்ற உறுப்பினர்களுக்கு கடும் பாதுகாப்பு வழங்க பாதுகாப்பு அமைச்சு முடிவு செய்துள்ளது.

இத் தேர்தல்களின் போது தெரிவு செய்யப்பட்ட பெரும்பாலான உறுப்பினர்களுக்கு கொலைப் பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன எனக் கூறப்படுகிறது. (இ-எ)

யாழ். மாவட்டத்திற்கான

## பல்கலைக்கழகக் கல்லூரி பருத்தித்துறையில் அமையும்?

யாழ்ப்பாணம், மார்ச் 7

பல்கலைக்கழக கல்லூரியை பருத்தித்துறையில் அமைக்க முயற்சி எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகும் மாணவர்களைத் தவிர்ந்த பல்கலைக்கழகம் செல்ல தகுதிபெற்ற மாணவர்கள் பட்டதாரி கல்வியைப் பெற மாவட்டத்துக்கு ஒரு பல்கலைக்கழக கல்லூரியை அமைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது தெரிந்ததே.

யாழ். மாவட்டத்துக்கென அமைக்கப்படவிருக்கும் பல்கலைக்கழக கல்லூரியை பருத்தித்துறையில் இயக்கச்செய்ய யாழ். பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். பல்கலைக் கழகத்துடன் இணைந்ததாக இக்கல்லூரி செயற்படும். (ஒ-3)

அகதிகளுக்கான ஐ. நா. தூதரக

## சர்வதேச பிரதிநிதி ஒருவரும் இனி இங்கு பணி புரிவார்?

யாழ்ப்பாணம், மார்ச் 7

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் தமது செயற் திட்டங்களை யாழ். மாவட்டத்தில் விரிவு படுத்தவிருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தமது அலுவலகத்தின் சேவையை அதிகரிக்கவும்—

சர்வதேசப் பிரதிநிதி ஒருவரை இங்கு கடமையாற்ற ஏற்பாடு செய்யவும் — இந்த அமைப்பு முடிவு செய்துள்ளதாகத் தெரியவந்தது.

யாழ். மாவட்டத்தில் சுப பொருளாதாரத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் சாத்தியம் குறித்து கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்திருந்த அந்த அமைப்பின் ஜெனிவா தலைமையக அதிகாரி ஆராய்ந்திருந்தார்.

தலைமையகத்தின் பணிப்பின் கீழ் இங்கு வந்திருந்த அவர் தமது அறிக்கையை தலைமையகத்துக்குச் சமர்ப்பிப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ 3)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

45 நாட்கள் நிரம்பிய அல்சேஷன் ஆண்குட்டி, 1½ வயதுடைய டப்பாலிஸ் பிச் ஆண் நாய், 3 மாதங்கள் நிரம்பிய அல்சேஷன் ஆண் குட்டி, கறுப்பு, சிவப்பு, வெள்ளை பொமனேரியன் நாய்க்குட்டிகளும் விற்பனைக்குண்டு. நடராசா, குலேந்திரன் வீதி (ஆசைப்பிள்ளை மில் ஒழுங்கை), பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு. [29767]

நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் கிரைண்டிங் மில் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: பிடாரி கோயிலடி, கொக்குவில் மேற்கு, ஆனைக்கோட்டை. (29765)

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் மகளிர் பாடசாலைக்கு கிட்ட 4 பரப்புக் காணி தனிக்கிணறு, குடியில்லாத வளவில் பனை, தென்னை உண்டு. கிழமை நாட்களில் பி.ப. 2–4 வரை தொடர்பு கொள்ளலாம் க. காசிப்பிள்ளை, அரச உத்தரவு பெற்ற நில அளவையாளர், செனற் ஆன்ஸ் ஒழுங்கை, மானிப்பாய். [7108]

## றோணியோ பிரதி

வினாத்தாள்கள், கட்டுரைகள், புத்தகங்கள் றோணியோ செய்து கொடுக்கப்படுகிறது. 100 பிரதிகள் இரண்டு பக்கத்திற்கும் 30/- மட்டுமே அறவிடப்படுகிறது. அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (சி–7433)

## சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் விருத்தியாகுமா? விவசாயம் வெற்றி தருமா? விவாகம் நடைபெறுமா? கேட்டுப் பாருங்கள்! த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோயில் வீதி, நல்லூர் வடக்கு. (முடமாவடிச் சந்தி) (29745)

# தையல் பயிற்சி பெற்ற 18 பேருக்கு சான்றிதழ்கள்

இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்டுள்ள பெண்களுக்கு சுயதொழில் வாய்ப்பை அளிக்கும் வகையில் தையல் பயிற்சி வழங்கும் திட்டம் ஒன்றை மனித முன்னேற்ற நிலையம் நடைமுறைப்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் மானிப்பாயில் தையல் பயிற்சி அளிக்கப்பட்ட 18 பேருக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

மனித முன்னேற்ற நிலையத்தின் இயக்குநர் அருட்திரு எஸ். எச். ஜெபநேசன் சான்றிதழ்களை வழங்கினார். (ஓ-3)

# காய்ச்சலினால் பாதிப்பு

தென்மராட்சி, மார்ச் 6

பளை வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவோரில் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

தினமும் அறுநூறுக்கும் மேற்பட்ட நோயாளர்கள் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைபெற வருவதாகவும் —

இதனால் காலை எட்டு மணி தொடக்கம் மாலை ஐந்து மணி வரை தொடர்ந்து டாக்டர்களும், ஊழியர்களும் சேவையாற்றி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (த-117)

# தரவு வங்கி

சுக்கவேலி, மார்ச் 7

கோப்பாய் பிரதேச பாடசாலைகளின் தேவைகளை நிறைவு செய்வதற்கு வசதியாக பிரதேசக்கல்விச் செயலகத்தில் 'தரவு வங்கி' அமைக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் பிரதேசக் கல்விச் செயலக பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு பொ. வீரபத்திரன் 'தரவு வங்கியில்' உள்ளடக்கவேண்டிய தகவல்களை பாடசாலை அதிபர்கள் மூலம் திரட்டுகின்றார். (த-11)

நல்லூர் வீனஸ் விளையாட்டுக் கழக
## ஓராண்டு பூர்த்தியும், சமய அறிவுப் போட்டியும்
# பரிசளிப்பு விழாவும்

இன்று (07 - 03 - 1994) பிற்பகல் 4-30 மணிக்கு நல்லை ஆதீனத்தில்

பிரதம விருந்தினர்:
அருள்மொழிச் செல்வர்
க நாகேஸ்வரன் M A

சிறப்பு விருந்தினர்:
க விவேகானந்தன்
(கிராமசேவகர், நல்லூர்)

"இசை" நிகழ்வும் இடம்பெறும்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

[29774]

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 11 — 05 — 1959

உதிர்வு: 05 — 02 — 19:4

## திருமதி நித்தியலக்ஷ்மிதேவி தவபாலசிங்கம்
(பேபிஅக்கா)
(வைத்தடி)

பேபி அக்கா!

நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்து 31 நாட்கள் சென்றாலும் நீங்கள் எம்மேல் வைத்திருந்த அன்பு, பற்று, பாசம் எங்கள் நெஞ்சை விட்டு என்றும் அகலாது. உங்கள் ஆத்ம சாந்திக்காக அனுதினமும பிரார்த்திக்கின்றோம்.

இன்று திங்கட்கிழமை அன்னாரது புலோலி இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்;
- குடும்பத்தினர்.

''சிவமகால்''
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை. (29768)

# முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி சுப்பிரமணியம் செல்லம்மா
(செல்லம்)

தோற்றம்: 21–06–1912

மறைவு: 16–02–1993

திதி: 07-03-1994

அன்று எம்முடனிருந்து நேசித்தீர்களே!
இன்று இறைவனிடமிருந்தும் நேசிப்பீர்களாக!!

என்றும் பட்சம் மறவாத
மகன், மகள், மருமகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

172 நெடுங்குளம் றோட்,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

# யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க திருச்சபையின் மேய்ப்புப்பணி மாநாடு

26 சிறப்பு விருந்தினர் என்று யார் வருகிறார்கள் என்று சொல்ல முடியுமா?

எமது முன்னாள் ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள், தென் இந்திய திருச்சபை, மெதடிஸ் திருச்சபை, அங்கிலிக்கன் திருச்சபை பிரதிநிதிகள், ஆயர்களான ஜெபநேசன் ஆண்டகை, அம்பலவாணர் ஆண்டகை ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

27 யாழ்ப்பாணத்திற்கு வெளியே இருந்து யாரும் வருகிறார்களா?

போக்குவரத்து நிலைமைகள் கடினம் என்றபடியால் நிச்சயமாக யார் வருகிறார்கள் என்று சொல்வது கடினம். எமது சகோதர மறை மாவட்டமான மன்னார் மறைமாவட்ட ஆயர் யோசவ் ஆண்டகை அவர்களும் மற்ற மறை மாவட்ட பிரதிநிதிகளும் வருவார்கள்.

28 இந்த மாநாட்டு நாட்களில் என்ன நடக்கும் என்ற ஒரு கேள்வியை நாம் கேட்கலாமா?

கேட்கலாம். முதல் நாள் அங்குரார்ப்பண வைபவம் நடைபெறும் நிரந்தரப் பிரதிநிதிகள் தம்மைப் பதிவு செய்த பின் 3-30 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

5 மணிக்கு ஒன்று கூடல், அறிமுகம் செய்தல் ஆகியவற்றுடன் முதலாவது அமர்வு இடம்பெறும்.

ஒவ்வொரு நாள் நிகழ்வுகளும் 7-30 மணிக்கு நாட் பிரதிநிதிகள் தம்மைப் பதிவு செய்வதோடும், செப வழிபாட்டோடும் ஆரம்பமாகும்.

மாலை 7-00 மணிக்கு திருமறைக் கலாமன்றத்தில் பங்குத் தயாரிப்பு நாடகங்கள், திருமறைக்கலா மன்றத் தயாரிப்பு ''பூப்புனல்'' நிகழ்வுகள் என்பவற்றுடன் முடிவடையும்.

அமர்வுகள் நாளுக்கு 5 என்ற வகையில் இடம் பெறும்.

29 அமர்வுகளில் என்ன நடக்க இருக்கிறது?

ஏற்கனவே தயாரிக்கப்பட்ட நிலைப்பாட்டு ஏடுகள் வாசிக்கப் பெற்று அபிப்பிராயங்கள் பெறப்பட்டு, முடிவுகள் எடுக்க வேண்டிய இடங்களில் வாக்கெடுப்பு நடத்தப்படும்.

30. வாக்கெடுப்பின் மூலம் இந்த விடயங்களிலும் முடிவுகள் எடுக்கப்படலாமா?

மிகவும் குறுகியகாலத்தில் உச்சபயனைப் பெறுவதற்கும், வீண் நேரவிரயங்களை தவிர்ப்பதற்காகவுமே ஒரு உயர்மட்டக் குழுவினர் ஒன்றாக அமர்ந்து இந்த நிலைப்பாட்டு ஏடுகளைத் தயாரித்துள்ளனர். முடிவுகள் எடுக்கப்பட வேண்டிய நேரத்தில் ஜனநாயக முறையில் வாக்கெடுப்பு நடத்தி முடிவுகள் எடுக்கப்படும்.

31 நிலைப்பாட்டு ஏடுகளில் உள்ள விடயங்கள் என்ன என்பது இரகசியமானதா?

அப்படி இரகசியமாக ஒன்றுமில்லை.

1. தன்னைப் புதுப்பித்து பகிர்ந்தளிக்கும் திருச்சபையை நோக்கி
2. எம்மைப் பற்றிய புதிய நோக்கும், எம்மை நோக்கிய புதிய பணியும்
3. நாம் இன்றைய உலகின் இறைமக்கள்
4. சீடத்துவமும் – அருங்கொடைகளும்
5. குருக்கள், துறவியரின் வாழ்வும் பணியும்
6. பொது நிலையினரின் அமைப்பு
7. நாம் கடவுளின் மீட்புப் பணியை மக்களுக்கு வழங்கும் அமைப்பு
8. ஆலயத் திருச்சபைகளும், குழுவாழ்வும் பங்கு அமைப்பும்
9. உலகிற்குப் பணிபுரியும் திருச்சபையின் நிறுவனங்கள் என்ற தலைப்புகளில்தான் நிலைப்பாட்டு ஏடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

32 இந்த அமர்வுகள் எல்லாம் யாழ் ஆயர் அவர்கள தலைமையில் தானா இடம் பெறும்?

யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் தலைமையிலும், வழிகாட்டுதலிலும் தான் இம் மாநாடே நடத்தப்படுகின்றது. ஆனால் எல்லா அமர்வுகளுக்கும் ஆயர் அவர்களே அவைத் தலைவராக இல்லாமல் மற்றைய குருக்கள், பொது நிலையினரையும் அவைத் தலைவர்களாக அமரும்படி ஆயர் அவர்கள் அழைத்துள்ளார்கள்.

33 பொது நிலையினரும் அவைத் தலைவர்களாக அமர்கிறார்களா?

நிச்சயமாக அமர்கிறார்கள். முதலாவது அமர்வுக்கு ஆயர் அவர்கள் அவைத்தலைவராக அமர்ந்த பின்னர்; 8 குருக்கள் அவைத் தலைவர்களாக அமர்வார்கள்; ஒரு அருட்சகோதரியும், 4 பொது நிலையினரும் அவைத்தலைவர்களாக அமருவார்கள் திரு. A S அகஸ்ரின், செல்வி எமில்டா போசேப்பின், திரு S F. சவுந்தரம், திரு. ஜெபநாதன் ஆகியவர்களே அந்த நான்கு பொது நிலையினரும்.

34 இம் மாநாடு பாரிய மாற்றங்களைக் கொண்டு வருமா?

பாரிய மாற்றங்களை உடனடியாகக் கொண்டு வருவதல்ல மாநாட்டின் நோக்கம். எம்மைப் புதுப்பித்துப் பகிர்ந்து வாழும் அன்புச் சமூகமாக மாறுவதும் உண்மையாகவே மாற்றங்கள் தேவைப்படுமிடத்து தூய ஆவியின் துணையோடு அவற்றைக் கொண்டு வருவதுமே நோக்கமாகும்.

35 மாநாடு வெற்றியளிக்குமா?

என்ன இப்படிக் கேட்டுவிட்டீர்கள். இன்றைய காலத்தின் இவ்வாறு ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த, எமது வளர்ச்சிப் பாதையின் ஓர் முக்கிய மைல்கல்லான இம் மாநாட்டைக் கூட்டுவதே ஒரு பெரு வெற்றிதானே. இந்த மாநாட்டு நாட்கள் மட்டும் வெற்றியைத் தரும் என்று எதிர்பார்ப்பது தவறு நாம் ஏற்கனவே வெற்றி பெற்றுவிட்டோம். மாநாட்டின் பின்னரும் எம்மைப் புதுப்பித்து, வெற்றி நடை போட்டுக் கொண்டே இருப்போம்.

தந்த விளக்கங்கள் அனைத்திற்கும் அன்பான நன்றிகளும் மாநாட்டிற்கு எமது வாழ்த்துக்களும்

அன்பளிப்பு:
வ அ எட்மன் குடும்பம் - ஜேர்மனி,
டாக்டர் A.L. ஏபிரகாம்.
பிலிப்ஸ் நேஸிங்ஹோம்,
சேவியர் [illegible] ஸ்தாபனத்தினர்.
பொது மக்கள் தொடர்புக் குழு.
[illegible]

[சி-7511]

## உணவு அனுப்பும் விடயத்தில்
# வடக்கை வேற்று நாடாக கருதுகிறது இலங்கை அரசு!
## தமிழ் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 7

யாழ்ப்பாணம் இந்த நாட்டின் ஒரு பகுதி. ஆனால் அங்கு உணவுப் பொருள்கள் அனுப்புவதை அரசு வேறு ஒரு தேசத்திற்கு அனுப்புவது போன்று பேசிக்கொள்கிறது.

யாழ். மாவட்ட எம். பி கே. நவரத்தினம் இவ்வாறு தெரிவித்தார். அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தில் அண்மையில் நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கிற்கு நாம் உணவு அனுப்புகிறோம். அங்கு மண்ணைத் தான் அவர்கள் உண்ணவேண்டி நேரிடும் எனக் கூறப்படுகிறது. இத்தகைய நிலையால்தான் 1987 ஆம் ஆண்டில் பிராஜ் விமானங்கள் மூலம் உணவுப் பொட்டலங்கள் விழுந்தன.

ஜனாதிபதியின் பேச்சை பெரும்பான்மை இனத்தவர்கள் கூட அங்கீகரிக்கவில்லை. வடக்கின் உண்மை நிலை தெற்கு மக்களுக்கு மூடி மறைக்கப்பட்டுள்ளது. மக்கள் சமாதானத்தையே விரும்புகின்றனர். மதகுருமார் யாழ். சென்று வந்து நிலைமையை விவரித்துள்ளனர். ஆனால் சீனா, ரஷ்யாவில் இருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்கிறீர்கள். நவீன விமானங்களை வாங்குகிறீர்கள். இது எதற்காக?

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்றிருந்தார். ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது.

இவ்வாறு அவர் அங்கு மேலும் கூறினார். (த 5)

# விற்பனையாகின்றன!

மக்கள் வங்கி எழுதுவினைஞர் /
ஆங்கில உதவி ஆசிரியர்

## போட்டிப்பரீட்சைகளுக்கான வழிகாட்டி

* பொதுவிவேகம், மொழித்திறன்
* English Teachers Exam Guide

வெளியீடு: அஸ்ரன்

எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம் (சி/7411)

## சகல வீடியோ நாடா வநியோகஸ்தர்களுக்கும்

வெளிவந்து விட்டது!

# "ஒளி வீச்சு ஜனவரி 94"

(சிறப்பு செய்தியாக கேணல் கிட்டு அவர்களின் ஓராண்டு நினைவின் நிகழ்வுகள்)

யாழ். மாவட்டத்திலுள்ள சகல வீடியோ நாடா விநியோகஸ்தர்களும் தவறாது கலை ஊடக இணையத்தில் இவ் ஒளி வீச்சை பதிவு செய்து (Recording) பெற்றுக் கொள்ளவும்.

பதிவுக் கட்டணம் 100/- மட்டுமே

- கலை ஊடக இணையம்

[சி-7510]

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்: 03 — 09 — 1926

மறைவு: 05 — 02 — 1994

## திருமதி நரசிங்கம் பொற்கொடி

மாதம் ஒன்று சென்றாலும்
மறையவில்லை உங்கள் நினைவு
ஒன்றென்ன ஓராயிரம் தான் சென்றாலும்
அகலாது எம் நெஞ்சை விட்டு
அன்பான உங்கள் மனமும்;
பாசமாகப் பழகும் பண்பும்;
நேசமாய் செய்யும் செயலும்
எம் நெஞ்சை விட்டு அகலாதென்றும்
தேவை என்று ஏதும் சொன்னால்
தேடி ஓடி வந்து செய்யும்
சிறப்பான செயல்கள் இன்றும்
மறையவில்லை எம்மை விட்டு
கொழும்பில் இருந்த நீங்கள்
திரும்பி வரக் காத்திருந்தோம்
திடுக்கிடச் செய்தது உங்கள் பிரிவுச் செய்தி
நாங்கள் நினையாத பிரகாரம்
பிரிந்தீர்கள் எம்மை விட்டு
ஒரு நொடிப் பொழுதினிலே – ஆனாலும்
உங்கள் நினைவு எம்மை விட்டு
என்றுமே பிரிவதில்லை.

கொழும்பில் நடைபெற்ற திருமதி நரசிங்கம் பொற்கொடியின் மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும்; உதவிகள், ஒத்தாசைகள் புரிந்தவர்களுக்கும் மற்றும் கண்ணீர் அஞ்சலிகள், அனுதாபச் செய்திகளை வெளியிட்டவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிள்ளைகள். மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

சுழிபுரம். (29775)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் தினத்தை ஒட்டி நாளை பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 7

அனைத்துலக பெண்கள் தினத்தை முன்னிட்டு விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பினால் நடத்தப்பட்ட இலக்கிய, ஓவியப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு விழா நாளை செவ்வாய் காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் இளங்கலைஞர் கலா மண்டபத்தில் நடைபெறும்.

இந்த வைபவத்தில் தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவனப் பொறுப்பாளர் இளவதனி தலைமை உரை நிகழ்த்துவார்.

விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் சிறப்புத் தளபதி ஜெனா பரிசுகளை வழங்குவார்.

யாழ். மாவட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் எழிலன் —

தமிழீழக் காவல்துறை வலிகாமப் பிரதேசப் மேற்பார்வையாளர் நா. சிவஞான சரஸ்வதி —

நிதர்சனம், புலிகளின் குரல் ஆவணக்காப்பக சிவகுமார் —

வெளியீட்டுப் பிரிவு, துணை பொறுப்பாளர் சுதாமதி — ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற உள்ளன. (இ)

# உளவு நிறுவனம் செயற்பட்டிருந்தால் ராஜீவ் கொலையைத் தடுத்திருக்கலாம்

## சுப்பிரமணிய சுவாமி சொல்கிறார்

சென்னை, மார்ச் 7

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாகக் கிடைத்த 'வயர்லஸ்' தகவலை இந்திய உளவு நிறுவனம் உடனடியாக கவனத்தில் எடுத்து செயற்பட்டிருந்தால் ராஜீவ் காந்தியின் உயிரை நாம் பாதுகாத்திருக்கலாம்.

ஜனதாக் கட்சி தலைவர் சுப்பிரமணிய சுவாமி அண்மையில் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்படுவதற்கு முன்னர் 1991 மார்ச் மாதத்தில் விடுதலைப் புலிகள் உளவுப் பிரிவு தலைவர்கள் சிவராசன், பொட்டு அம்மான் ஆகியோர் பேசிய ''வயர்லஸ்'' தகவலின் ஒலிப் பதிவு நாடா ஒன்று இந்திய இராணுவத்தினரிடம் சிக்கியது.

ராஜீவ் காந்தியை சென்னையில் வைத்துக் கொல்வதா, அல்லது டெல்லியில் வைத்துக் கொலை செய்வதா என்று அந்த 'வயர்லஸ்' தகவலில் கூறப்பட்டிருந்தது

இத்தகவலை மத்திய அரசு உளவு நிறுவனம் (ஐ.பி) மூலம் உடனடியாக 'ஏரியா' உளவு நிறுவனத்துக்குத் தெரிவித்திருக்கலாம். ஆனால் இத்தகவல் குறித்து தாமதமாகத் தெரிவிக்கப்பட்ட காரணத்தால் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டார்.

இவ்வாறு செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி ஒன்றில் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த 5)

# மேய்ப்புப் பணி மாநாடு நாளை ஆரம்பமாகிறது

## மன்னார் ஆயர் வந்து சேர்ந்தார்

யாழ் மறை மாவட்ட கத்தோலிக்க திருச்சபையின் ஆதரவில் நாளை ஆரம்பமாகும் மேய்ப்புப்பணி மாநாட்டில் கலந்து கொள்ள மன்னார் மறை மாவட்ட ஆயர் அதி. வண. இராயப்பு யோசேப் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

இம்மாநாட்டில் பங்கேற்க மன்னார், கிளிநொச்சி மறை மாவட்ட குரு வானவர்களும் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர் என்றும் —

கொழும்பு, திருகோணமலை, மட்டக்களப்பு மறை வட்டங்களைச் சேர்ந்த குருவானவர்கள் நாளை இங்கு வந்து சேர்வர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேய்ப்புப்பணி மாநாடு நாளை முதல் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை சென். பத்திரிக்ஸ் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது என்பது தெரிந்ததே. (ஓ 51-3)

# மயூரனுக்கு இன்று அஞ்சலி

கடந்த முதலாம் திகதி கௌதாரிமுனையில் ஸ்ரீலங்கா இராணுவ நடமாட்டத்தை அவதானிக்க சென்ற வேளை ஏற்பட்ட எதிர்பாராத மோதலில் வீரச்சாவை தழுவிக் கொண்ட எட்டு வீர வேங்கைகளில் லெப்டினன்ட் மயூரனின் திருவுருவப்படம் அவரது இல்லத்தில் இருந்து இன்று பிற்பகல் 2 மணியளவில் கொழும்புத்துறை சனசமூக நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

மக்கள் அஞ்சலியை தொடர்ந்து அங்கிருந்து பிற்பகல் 3 மணிக்கு கோண்டாவில் அரசியல் துறை செயலகத்துக்கு உருவப்படம் எடுத்துச் செல்லப்படும்.

பின்னர் 4 மணியளவில் அணிவகுப்பு மரியாதையுடன் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு நினைவுகள் நடப்படும். (இ-3)

# மரண அறிவித்தல்கள்

## A. T. சின்னையா

(ஓய்வு பெற்ற பெருந் தோட்ட அதிகாரி)

கைலாய பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சண்டிக்குளியில் வசித்தவருமாகிய திரு. A. T. சின்னையா 06-03-1994 இல் காலமானார்.

இவர் சி. சிவகுமாரன் (இளைப்பாறிய Mercantile Executive), சி செல்வக்குமாரன் (இளைப்பாறிய Chief Security Officer Bank of Ceylon), காலஞ்சென்ற T. C யோகக்குமாரன் (Retd. Senior Superintendant of Police), தனலக்ஷ்மி தேவி (கொழும்பு), நித்தியலக்ஷ்மி தேவி (கொழும்பு) Dr. விஜயலக்ஷ்மி தேவி (London), ஆகியோரின் பாசமுள்ள தகப்பனாரும், பத்மாவதி (இளைப்பாறிய ஆசிரியர்), காலஞ்சென்ற நகுலாம்பிகை (இளைப்பாறிய ஆசிரியர்), அருளோதயம் (இளைப்பாறிய ஆசிரியர்), மகேந்திரன் (இளைப்பாறிய Works Superintendant), காலஞ்சென்ற Dr. தர்மகுலசிங்கம், விஜயகுலசிங்கம் (Charted Engineer, London) ஆகியோரின் அன்பு மாமனாரும், ரஜனி, ரஞ்சன், அனுசா, நிறஞ்சன், சாமளா, பிறேமிளா, பிரகாஷ், பிரபாகரன், நிர்மினி, கஜேந்தன், கிருஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 06-03-1994 ஞாயிற்றுக்கிழமை 4 மணிக்கு பருத்தித்துறை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
T. சிவகுமாரன் (மகன்).

V. M. றோட்,
S. P. லேன்,
பருத்தித்துறை. [29773[

## திருமதி கதிரவேலு சிவநிதி

(ஓய்வு பெற்ற ஆசிரியை)

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி கதிரவேலு சிவநிதி அவர்கள் 05-03-94 ஆம் திகதி சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கதிரவேலுவின் அன்பு மனைவியும் வாசவன் (ஆங்கில ஆசிரியர் வவுனியா), தேசவன் ஆகியோரின் அன்புத்தாயாரும், றாஜியின் அன்பு மாமியாரும், சிவானந்தன் (நோர்வே), நடராசா (முகாமையாளர் சிங்கர் கொம்பனி வவுனியா), காலஞ்சென்ற செல்வநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தூயோனின் ஆசை அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07-03-94) திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கதிரவேலு
கணவன்

கிறிஸ்தவ கோயில் அருகில்,
கே. கே. எஸ். வீதி, கொக்குவில். (29777)

## அப்பாப்பிள்ளை தம்பிஐயா

(சீவரத்தினம்)

ஓய்வுபெற்ற முன்னாள் சிமெந்துத் தொழிற்சாலை பிரதம களஞ்சியப் பொறுப்பாளரும், 160, இராமலிங்க வீதி, திருநெல்வேலி கிழக்கை வசிப்பிடமாகக் கொண்டவருமான அப்பாப்பிள்ளை தம்பிஐயா (சீவரத்தினம்) நேற்று (6-3-94) சிவபதமடைந்துவிட்டார். இவர் காலஞ்சென்ற அப்பாப்பிள்ளை — அம்மாப்பிள்ளை தம்பதிகளின் இளைய மகனும், காலஞ்சென்ற மீனாச்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செல்வராசா, சுந்தரம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், இரஞ்சிதபூசணி (நெசவு பயிற்சிப் பாடசாலை) விவேகானந்தன் (லண்டன்), அருளானந்தன் (லண்டன்), பிறேமாவதி (பிரான்ஸ்) யோகானந்தன் (லண்டன்), சற்குணானந்தன் (நீர்வேலைப் பகுதி, யாழ் மாநகர சபை), சந்திரவதனா (கனடா) சுதானந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேஸ்வரன் (ஆசிரியர், திருநெல்வேலி இ. த. க. பாடசாலை), அரியமலர் (லண்டன்) சாந்தி (லண்டன்), கருணாகரன் (பிரான்ஸ்), யசோதா (லண்டன்), சுதாமதி, மனோகரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், சதீஸ், பிரதீஸ், தேவகி, சுதர்சன், சிந்தியாமனோ, அபினாஸ், சஞ்சிகா, நிருபா, நிருபன், நிருஜன், காலஞ்சென்ற தினேஸ், நிரோஸ், உமேஸ், சுரேஸ், தினேஸ் கஜீவன், தர்சிகன், ருஜிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் இன்று (7-3-94) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தகனக்கிரியைக்காக அன்னாரது இல்லத்திலிருந்து செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

தகவல்:
த. சற்குணானந்தன் (மகன்)
ந. மகேஸ்வரன் (மருமகன்)

முடமாவடி, (29779)

# உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச். 7

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் சென். அன்ரனீஸ் மைதானத்தில் நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் பங்கு பற்றும் கழகங்கள் வருமாறு.

சென். அன்ரனீஸ் எதிர் ஞானமுருகன். (ஒ-3)

# இன்று

அனைத்துலக மகளிர் தினத்தையொட்டி அரியாலை ஸ்ரீகலைமகள் சனசமூகநிலைய மாதர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள மகளிர்விழாவும், கௌரவிப்பு வைபவமும் கலை நிகழ்ச்சிகளும் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு மேற்படி நிலையத்தில் சங்கத் தலைவி திருமதி நாகராஜா புஸ்பமணி தலைமையில் நடைபெறும். (த)

# நாளை

தொலைக் கல்வி நிலைய இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்களுக்கான விசேட பாட நெறிகளுக்கான இரண்டு நாள் செயலமர்வுகள் எதிர்வரும் 13 ஆம், 14 ஆம் திகதிகளில் முருகமூர்த்தி மடம் தொலைக் கல்வி நிலையத்தில் நடைபெற இருப்பதால் —

சகல இரண்டாம் வருட பயிலுநர் ஆசிரியர்களையும், விசேட பாட நெறிகளுக்கான போதனாசிரியர்களையும் நாளை செவ்வாய் பிற்பகல் 3 மணிக்கு நிலையத்திற்கு சமூகமளிக்கும்படி சிரேஷ்ட போதனாசிரியர் கேட்டுக் கொண்டுள்ளார். (த)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச். 7

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு உடற்பயிற்சிப் போட்டி நடைபெறும்.

வர்த்தகவங்கி யாழ் முகாமையாளர் திரு. ஆர் வெங்கட்ராமன் பிரதம விருந்தினராகவும், டாக்டர் பொ. சிவயாதம், விடுதலைப்புலிகளில் மாணவர் அமைப்பு விகாமம் பிரிவுப் பொறுப்பாளர் திரு ச. செழியன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (ஓ-2)

# கம்யூனிஸ்ட் பொன்னம்பலம் காலமானார்

யாழ்ப்பாணம், மார்ச் 7

வடக்கின் முன்னாள் அரசியல் வாதிகளில் ஒருவரான திரு. வி. பொன்னம்பலம் (65 வயது) கனடாவில் மாரடைப்பால் மரணமானார்.

இவர் யாழ்ப்பாணத்தின் பிரபல இடதுசாரித் தலைவராக விளங்கியவர். இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் நீண்ட கால உறுப்பினரான இவர் யாழ்ப்பாணக் கிளையின் செயலாளராகப் பல ஆண்டுகள் பணிபுரிந்தார்.

சிறந்த மேடைப் பேச்சாளராக விளங்கிய இவர் காங்கேசன்துறைத் தொகுதியில் தந்தை செல்வநாயகத்தை எதிர்த்து கம்யூனிஸ்ட் வேட்பாளராகப் போட்டியிட்டார்.

தத்துவத் துறையில் எம்.ஏ. பட்டம் பெற்ற இவர் யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் ஆசிரியராகவும் பணியாற்றினார்

அளவெட்டி, மல்லாகம் கிராமசபைத் தலைவராக பின்னர் பதவி வகித்த இவர் பாட்டாளி மக்களின் முன்னேற்றத்துக்காகப் பாடுபட்டவர்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவிலும் திரு. பொன்னம்பலம் அங்கத்தவராக இருந்தார். (அ-5)

## வெள்ளப் பாதிப்பு:

# அரச ஊழியருக்கு ரூ. 1000 முற்பணம்

கொழும்பு, மார்ச் 7

கடந்த டிசம்பர் இறுதியில் வடக்கு, வடமத்தி, வடமேல் மாகாணங்களில் பெய்த கடும் மழை, வெள்ளம் காரணமாகப் பாதிக்கப்பட்ட அல்லது சொத்துக்களை இழந்த அரசாங்க ஊழியர்களுக்கு ஆயிரம் ருபா சம்பள முற்பணம் வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இந்த சம்பள முற்பணம் பத்துத் தவணைகளில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும் என்றும்—

சமயா, சமய தற்காலிக ஊழியர்களுக்கும் இது வழங்கப்படும் என்றும்—

ஆனால் அவர்களுக்கு நிரந்தர ஊழியர்கள் பிணைநிற்க வேண்டும் என்றும்—தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்ட ஊழியர் மழையினால் பாதிக்கப்பட்டாரென அதிகாரிகள் திருப்தி அடைந்தால் மட்டுமே இப்பணம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இப்பணம் வழங்குவது சம்பந்தமான சுற்றறிக்கை ஒன்றை பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் திரு. வை. வி. புஸ்ஸதெனியா அமைச்சர்களின் செயலாளர்களுக்கும் திணைக்களங்களின் அதிபர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார் என கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (இ-8)

## மிதிவெடியில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லும் சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை, நகருக்கு வெளியே 115க்கும் மேற்பட்ட இராணுவ முகாம்கள் உள்ளன.

திருமலை மாவட்ட எல்லைப் புறத்திலுள்ள தமிழரின் தாயகபூமியான பன்குளம் பகுதி சிங்களக் குடியேற்றங்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது

தமிழ் மக்கள் வாழ்ந்து வரும் பகுதிகளில் ரோந்து செல்லும் படையினர் முதியவர்கள் இளைஞர்கள் என்று வித்தியாசம் இன்றி அனைவரையும் தாக்கி வருகின்றனர்.

இவ்வாறு திரு. குணம் பேட்டியில் தெரிவித்தார். (ஓ)

## வளைகுடா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நஷ்ட ஈட்டு ஆணைக்குழு நிர்வாகக் கவுன்சிலின் செயலாளர் அறிவித்திருப்பதாகவும் தொழில் அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

முதலில் வளைகுடா யுத்தத்தில் கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களுக்கும் மற்றும் காயமுற்றவர்களுக்கும் நஷ்டஈடு வழங்கப்படும் என்றும்—

அதன் பின்னர் யுத்தத்தினால் வேலை இழந்தவர்களுக்கும் நஷ்டஈடு வழங்கப்படும்— என்றும் ஐ.நா. நஷ்டஈட்டு ஆணைக்குழு வட்டாரங்களை மேற்கோள் காட்டி தொழில் அமைச்சு தெரிவித்தது (அ)

## ஐ. தே. க தெற்கில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாடுகளின் தலைவர்களுக்கும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளுக்கும் அனுப்பு[illegible] காங்கிரஸ் நடவடிக்கை [illegible] (இ-6)

## ராணுவ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வதற்கென்றே ஏற்படுத்தப்பட்டது தான் வெலிஓயா திட்டம். இனப்பிரச்சினை மோசமடைய இது முக்கிய காரணம் என்றும் அவர் தெரிவித்தார்.

பேராசிரியர் கே. ஸ்ரீதரன் கருத்துத் தெரிவிக்கையில் திருகோணமலை, வவுனியா முல்லைத்தீவு மாவட்டங்களின் கேந்திர ஸ்தானத்தில் வெலிஓயா அமைந்திருப்பதாகவும்—

வடக்கு-கிழக்கு இணைப்பை இல்லாமல் செய்வதற்கும், வடக்கு-கிழக்கு தமிழர் தாயகம் என்ற நிலைப்பாட்டை உடைப்பதற்காகவும் வெலிஓயா திட்டம் ஏற்படுத்தப்பட்டது என்றும் கூறினார்.

இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த செய்தியாளரான கல்பனா ஜசக் கருத்துத் தெரிவிக்கையில் அபிவிருத்திக்கு என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட வெலிஓயா இராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான பலப்பரீட்சையின் நிலைகளாக தற்போது விளங்குவதாகக் கூறினார்.

வடக்கு கிழக்கு எல்லைப்புற மாகாணங்களில் பொது மக்களிடம் பாதுகாப்புக்கு ஆயுதங்கள் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் ஆனால் வெலிஓயாவில் அவர்கள் ரோந்து செல்வதைக் காணக் கூடியதாக இருப்பதாகவும் கல்பனா ஜசக் தெரிவித்தார் (இ)

## கனேடிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரு. விஜேதுங்கா முன்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார் என்று கூறப்படுகிறது.

இனப்பிரச்சினையில் கனேடியர்கள் போன்ற வெளிநாட்டு மத்தியஸ்தர்கள் எவ்வித பங்களிக்க பாத்திரத்தையும் வகிக்க முடியாது—

கனேடிய ஸ்தாபனங்களும், தனிநபர்களும் எத்தவித நியநோக்கமும் இன்றித் தெரிவித்த அபிப்பிராயங்களை, அரசுக்கும் திரு. தொண்டமானுக்கும் பிரச்சினையை உண்டாக்கும் விதத்தில் பத்திரிகைகள் பயன்படுத்துவதையிட்டு நான் கவலையடைகிறேன்— என்றும் ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

வடக்கு-கிழக்கு பிரச்சினை தொடர்பாக எவ்வித வெளிநாட்டு மத்தியஸ்த நடவடிக்கையிலும் இலங்கை அரசு அக்கறை காட்டவில்லை என சம்பந்தப்பட்ட கனேடிய ஸ்தாபனங்களுக்கும், தனிநபர்களுக்கும் தெரிவித்து விடுமாறும் ஜனாதிபதி அமைச்சர் தொண்டமானிடம் கேட்டுக் கொண்டதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஒ-5)

# உணவு போசாக்கு மேம்பாட்டுத் திட்டம்

## பருத்தித்துறையில் ஆரம்பம்

வடமராட்சி, மார்ச் 7

உணவு போசாக்கு மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் உடனடியாக ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டம் கிராம சேவையாளர் பிரிவுகள் தோறும் தற்போதைய மூலவளங்களைப் பயன்படுத்தி உடனடியாக அமுல் செய்யப்படும்.

திட்டத்தை மேலும் விஸ்தரிக்க மத்திய அரசின் கொள்கை திட்டமிடல் அமைச்சிடமிருந்து நிதி கோருவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பான கூட்டம் ஒன்று பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. ஆ. சிவசாமி தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிராம சேவை அலுவலர்கள், பிரதேச சபை, நகர சபைகளின் அதிகாரிகள், சுகாதார, கல்வித் திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அ. தி. மு. கவுடன் உறவு வேண்டாம்

## நரசிம்மராவிடம் கோரிக்கை

சென்னை, மார்ச் 7

தமிழ்நாட்டின் அரசியல் நிலைமையை ஆழ்ந்து பரிசீலனை செய்து காங்கிரஸின் கௌரவத்தைப் பாதுகாக்க வேண்டும். அ. தி. மு. கவுடன் உறவு வைப்பது குறித்து தற்போது சிந்திக்க வேண்டாம்.

வாழப்பாடி இராமமூர்த்தி தலைமையில் நேற்று நடைபெற்ற காங்கிரஸ் நிர்வாகிகள், சட்டபேரவை, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் மேற்கண்டவாறு பிரதமர் நரசிம்மராவைக் கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மற்றும் அ. தி. மு. க. வின் பல்வேறு செயற் பாடுகளையும் குறை கூறும் தீர்மானமும்.

தமிழக மீனவர்களின் பாதுகாப்பை மத்திய அரசு உறுதி செய்ய வேண்டும் என்ற தீர்மானமும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. (இ-9)

# ஜீ. சீ. ஈ உயர்தர விண்ணப்ப படிவம்

யாழ்ப்பாணம், மார்ச். 7

எதிர்வரும் ஆண்டில் நடைபெறவுள்ள ஜீ. சீ. ஈ உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் இம்மாத நடுப்பகுதியில் இங்கு வந்துசேரும் என கல்வி அலுவலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-5)

# மரண அறிவித்தல்

## இராசையா அன்னம்மா

(2 ஆம் வட்டாரம் புங்குடுதீவு)

புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது 27/1 பொன்னப்பா லேன், வண்ணார் பண்ணை யாழ்ப்பாணத்தில் வசிப்பவருமாகிய இராசையா அன்னம்மா 6.3.94 அன்று காலமாகிவிட்டார். அன்னார் இராசையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நாகநாதன் வள்ளியம்மை ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கோவிலார், பார்வதியின் மருமகளும், இராசலட்சுமி (லண்டன்), நாகராசா (கனடா), தனலட்சுமி, அன்னலட்சுமி, சொர்ணலட்சுமி (கனடா), சுந்தரலிங்கம் (ஆசிரியர் யாழ். இந்துக் கல்லூரி), தியாகலிங்கம் (கிராம அலுவலர், உருத்திரபுரம்), விஜயலட்சுமி, பரமேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற தியாகராசா (ஆசிரியர்), இராஜேஸ்வரி (கனடா), கனகரட்ணம், துரைசிங்கம், நடேசபிள்ளை (கனடா), ரஜனி, பிறேமாவதி (ஆசிரியை, உருத்திரபுரம் மகாவித்தியாலயம், கிளிவலிங்கம் (சுவிஸ்), ஆனந்தராசா (கனடா) ஆகியோரின் மாமியாரும், கந்தையா, காலஞ்சென்றவர்களான சின்னம்மா, நாகலிங்கம், சின்னத்தாய், சின்னப்பிள்ளை, முத்தையா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற முத்தையாவின் அன்பு மைத்துனியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 7.3 94 திங்கட்கிழமை காலை 10 00 மணிக்கு 27/1, பொன்னப்பா லேன் இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

தகவல்:
இ' சுந்தரலிங்கம்
மகன்

27/1, பொன்னப்பா லேன்,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம். (29778)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 892/8 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 07-03-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org